பக்கங்கள்: 11
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 31 செவ்வாய்க்கிழமை 15.06.2021 கதிர் 88

# அதிகளவானோர் நேற்றுமாட்டினர்!

## இதுவரை 33,949 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் ஆயிரத்து 356 பேர் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

2

# கூட்டமைப்பினருடன் கோட்டா நாளை மாலை முக்கிய பேச்சு

## புதிய அரசமைப்பு தொடர்பில் கலந்துரையாடுவோம் என்கிறார் சுமந்திரன்; பொறுப்புக்கூறல் விடயம் 'அவுட்'



இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை நாளை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.ஜனாதிபதி செயலகத்தில் நாளை மாலை 4 மணியளவில் இந்தச் சந்திப்பு இடம் பெறவுள்ளது. இதில் கூட்டமைப்பின் தலைவருடன் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை சேனாதிராஜா (தமிழரசுக் கட்சி), செல்வம் அடைக்கலநாதன் (ரெலோ), தர்மலிங்கம் சித்தார்த்தன் (புளொட்) ஆகியோரும், கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

2

## பிந்திய செய்தி

# கூட்டமைப்புடனான பேச்சு கடைசி நேரத்தில் ரத்து!

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும் இடையில் நாளை மாலை நடைபெறவிருந்த நேரடிப் பேச்சு கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்தப் பேச்சுப்பற்றிய விவரம் வெளிவந்ததால் தெற்கில் ஜனாதிபதிக்கு ஏற்பட்ட அழுத்தத்தையடுத்தே அவர் பேச்சை இப்போதைக்குத் தள்ளிப்போடும் முடிவை எடுத்திருக்கிறார் எனக் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன. புதிய பேச்சுத் தினம் பின்னர் அறிவிக்கப்படும் என கூட்டமைப்புக்கு இன்று மாலை தெரிவிக்கப்பட்டது.

(இந்தப் பேச்சு நடைபெறாமல் போகும் சூழ்நிலை ஏற்பட முன்னர் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் 3 ஆம் பக்கத்தில்)

# வவுனியா நகர சபைத் தலைவர் கைதாகி பிணையில் விடுவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா நகர சபைத் தலைவர் இ. கௌதமன், இன்றுபொலிஸாரால்கைதுசெய்யப்பட்டு, பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அண்மையில், வவுனியா நகரில் அமைந்துள்ள வாடி வீடு வளாகத்துக்கு விஜயம் செய்த நகர சபைத் தலைவர், அதற்கு சீல்வைத்திருந்தார்.

இதன்போது அங்கு கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியருடன் நகர சபைத் தலைவர் முரண்பட்டார் எனத் தெரிவித்து, வவுனியா பொலிஸ்

2

# நாவற்குழியில் திறந்துவைக்கப்பட்டது கொரோனா இடைத்தங்கல் நிலையம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., நாவற்குழி பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கொரோனா இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் இன்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகத்துக்குச் சொந்தமான நெல் களஞ்சியசாலையில், 200 கட்டில்களுடன் இந்த இடைத்தங்கல் பராமரிப்பு நிலையம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதனை யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த பெரேரா

2

# ஊர்காவற்துறையில் உயிரிழந்த நிலையில் கரை ஒதுங்கிய 30 அடி நீளமான திமிங்கிலம்



(ந.லோகதயாளன்)

யாழ்., ஊர்காவற்றுறைக் கடற்பகுதியில் இன்று அதிகாலை உயிரிழந்த நிலையில் 30 அடி நீள திமிங்கிலம் கரை ஒதுங்கியது.

குறித்த திமிங்கிலம் உயிரிழந்தமைக்கான கரணத்தைக் கண்டறியும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்காகக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் அதிகாரிகளுடன் வன ஜீவராசிகள் திணைக்களத்தின்

2

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின்

# தமிழ்ப் பொறுப்பதிகாரியாக மேனகா மூக்காண்டி நியமனம்



சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி மேனகா மூக்காண்டி, ஜனாதிபதி ஊடகப் பிரி வின் தமிழ்ப் பிரிவு பொறுப்பதிகாரியாகவும்பிரதிப் பணிப்பாளராகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.

நுகேகொடை தமிழ் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவி

2


Maligai.lk
doorstep grocer

பயணக்கட்டுப்பாடா?
கவலை வேண்டாம்...




உங்களுக்குத் தேவையான காய்கறிகள், பழங்கள் மற்றும் பலசரக்குப் பொருட்களை www.maligai.lk இல் அல்லது 0703123456 இல் ஓடர் செய்து வீட்டிற்கே பெற்றிடுங்கள்!




We are operating during Travel restrictions to serve your home needs. Place your orders on www.maligai.lk or 0703123456 and stay safe.

Shop now on
www.maligai.lk
Call & Order
0703123456

## நாவற்குழியில் திறந்து...................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மற்றும்மாவட்ட அரசஅதிபர்க.மகேசன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்த னர்.

குறித்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப் பாளர், யாழ். மாவட்ட மேலதிக அரச அதி பர், வடக்கு மாகாண சுகாதாரத் திணைக் களத்தின் அதிகாரிகள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, மாவட்ட மக்களின் செயற்பாடுகளாலேயே இந்த மாவட்டத் தில் தொற்று அதிகரித்தது என்று கூறி னார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் கடந்த காலத்தைவிட தற்போது தொற்று அதிகரிக்கும் நிலை காணப்படுகின்றது எனவும், சில ஆலயங்களில் சுகாதாரப் பிரிவினரின் கட்டுப்பாடுகளை மீறி உற்சவங்கள் நடத்தப்படுகின்றன என வும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் மக்கள் நிலைமைகளைப் புரிந்துகொண்டு நடந்துகொள்ள வேண்டியது அவசியமாகும் எனவும் இராணுவக் கட்டளைத் தளபதி கேட்டுக் கொண்டார்.

## வவுனியா நகர......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய் யப்பட்டது.

இதையடுத்து இன்று நகர சபைத் தலைவர் பொலிஸ் நிலையத்துக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்ட நிலையில் கைதுசெய்யப்பட்டார். பின் னர் அவர் பொலிஸ் பிணையில் விடு விக்கப்பட்டார்.

## அதிகளவானோர்......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இதன்படி கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரை அந்தச் சட் டத்தை மீறிய குற்றச்சாட்டில் 33 ஆயி ரத்து949பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார்.

## ஊர்காவற்துறை......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட குழு வினரும் சம்பவ இடத்துக்கு நேரில் பயணித்து ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில்'எக்ஸ் - பிரஸ் பேர்ள்' கப்பலில் ஏற்பட்ட தீ அனர்த்தத்தையடுத்து கடல் வாழ் உயிரினங்கள் இறந்த நிலையில் பல்வேறு இடங்களில் கரை ஒதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப் பொறுப்பதி......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

யான திருமதி மேனகா மூக்காண்டி, இலங்கை இதழியல் கல்லூரியில், துறைசார் கல்வியைக் கற்றவராவார்.

15 வருட கால தனது ஊடக வாழ்வில் ஊடகவியலாளராகவும் செய்தி ஆசிரிய ராகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளராக திருமதி மேனகா மூக் காண்டி நியமனம் பெறுவதற்கு முன்னர் 'தமிழ்மிரர்' பத்திரிகையின் செய்தி ஆசிரி யராகக் கடமையாற்றினார்.

# பயணக் கட்டுப்பாடு நீக்கமா? சனி அல்லது ஞாயிறு முடிவு

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

எதிர்வரும் 21ஆம் திகதியன்று பயணக் கட்டுப்பாட்டை நீக்குவதா? அல்லது இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் சனி (19) அல்லது ஞாயிறுக் கிழமை (20) தீர்மானிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரான அமைச் சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் இன்று நடைபெற்று வாராந்த அமைச் சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 21ஆம் திகதி பயணத் தடை தளர்த்தப்பட வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. ஆனால், அது பற்றி தற்போதே முடிவெடுக்க முடியாது. அனைத்துக் காரணிகள் பற்றியும்



ஆராய வேண்டும். அந்தவகையில் எதிர்வரும் 19 அல்லது 20ஆம் திகதி யளவில் தீர்மானம் எடுக்கப்படும் – என் றார்.

## கூட்டமைப்பினருடன்....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இந்தச் சந்திப்புக்கான அழைப்பை ஜனாதிபதி செயலகம் கடந்த 8ஆம் திகதியே கூட்டமைப்பினருக்கு அனுப் பியிருந்தது எனவும், ஆனால் கூட்ட மைப்பினர் இந்தத் தகவலை வெளியில் கசியவிடாது மறைத்து வைத்திருந்தனர் எனவும் அறியமுடிந்தது.

இதேவேளை, புதிய அரசமைப்பு உருவாக்கும் விடயத்தில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நிலைப்பாடு தொடர் பில் கலந்துரையாட இரா.சம்பந்தன் தலை மையிலான கூட்டமைப்பினரை நாளை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சந்தி க்க வுள்ளார் என்று நாடாளுமன்ற உறுப் பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கின் அபிவிருத்தி செயற் பாடுகள் குறித்தும் இதன்போது கலந்து ரையாட எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறினார். பொறுப்புக்கூறல் விவகாரம் தொடர்பில் இந்தச் சந்திப்பில் பேசமாட் டோம் எனவும் அவர் மேலும் குறிப்பிட் டார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

நாளைய தினம் காலைக்கதிர் காலை இதழில் தரம் - 09இற்கான கணித பாட பயிற்சி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## கூட்டமைப்பின் நெருக்கடி

மீண்டும் இலங்கையின் ஆட்சிப் பீடத்துடன் நேரடிப் பேச்சுக்குச் செல்லுகின்றது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. இந்தச் சமயத்தில் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு இரண்டு யதார்த்த நிலைமைகளைச் சுட்டிக் காட்டுவது நமது கடமையாகின்றது.

ஒன்று – இதுவரை காலமும் தமிழ்க் கூட்டமைப்பு நாட்டில் அதிகாரத்தில் இருந்த ஆட்சித் தரப்புகளுடன் பேசிய விடயங்களில் வெளிப்படைத் தன்மையுடன் இருக்கவில்லை, ஒளிவு மறைவாக நடந்து கொண்டது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக உள்ளது. கடந்த பொதுத் தேர்தலிலும் அதற்கு முந்தைய உள்ளூராட்சித் தேர்தல்களிலும் தமிழ்க் கூட்டமைப்பு பெரும் பின்னடைவை – வீழ்ச்சியை – சந்தித்தமைக்கு இக்குற்றச்சாட்டும் பிரதான காரணம்.

தங்களுடன் முரண்பாடு கொண்டிருக்கும் ஆட்சித் தலைமைகளுடன் பேசும்போது அல்ல, மிகுந்த நெருக்கமாகப் பழகும் ஆட்சித் தலைமைகளுடன் பேசும் போதும்தான் கூட்டமைப்பிடம் வெளிப்படைத் தன்மையை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் 2011 – 2012 காலப் பகுதியில் 17 சுற்றுப் பேச்சுகளை நடத்திய சம்பந்தன் – சுமந்திரன் அணி ஒவ்வொரு சந்திப்பின் போதும் பேசப்பட்ட விடயங்கள் குறித்து அறிக்கை பதிவு செய்து, அடுத்த கூட்டத்தின் போது முந்திய கூட்ட அறிக்கை பதிவு செய்து, வாசித்து அங்கீகரித்தும் வைத்துக் கொண்டது. அவை முரண்பாடுடன் நடந்த சந்திப்புகள், பேச்சுகள். ஆனால், ரணிலின் நல்லாட்சி அரசுடன் நடந்த எந்தப் பேச்சுக் குறித்தும் பதிவு ஏதுமில்லை. அந்த அரசுடன்தான் அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் நடந்தனவாயினும், அதற்கு அப்பால், நடந்தவை குறித்துப் பதிவு ஏதும் கிடையாது. – தனித் தனி எம்.பிக்களும் இத்தனை கோடி ரூபா ஒதுக்கீடு செய்ய இணக்கம் என்று அரசல் புரசலாக அவ்வப்போது வெளியாகிய செய்திகளைத் தவிர.

சம்பந்தன் தனியாக அல்லது சம்பந்தனும் சுமந்திரனும் தனியாகச் சென்று பேசுகின்றார்கள், அப்படி இல்லாவிட்டாலும் அனைத்துக் கூட்டமைப்புத் தலைவர்களும் சென்று பேசினாலும் அவை வெளிப்படைத் தன்மையாக மக்களுக்குத் தெரிவிக்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டுப் பரவலாக உள்ளது. அது உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம்.

எது, எப்படி என்றாலும், இந்தப் பேச்சுகளில் தாங்கள் வெளிப்படைத் தன்மையோடு இருக்கின்றோம் என்று காட்ட வேண்டிய கட்டாயம் கூட்டமைப்புக்கு உண்டு.

அடுத்தது – இப்போது கூட்டமைப்பின் நிலைமை முன்னைய மாதிரி தமிழர்களின் ஏக, தனித்துவப் பிரதிநிதித்துவம் அல்ல. தமிழ் மக்கள் வேறும் கட்சிகளில் இருந்து நாற்பது வீதமான பிரதிநிதிகளைத் தேர்வு செய்திருக்கின்றனர் என்பது மறுக்கக் கூடியதல்ல. இந்தப் பின்புலத்தில் தான் இப்போது கோட்டா அரசுடன் பேச்சுக்குப் போகின்றது கூட்டமைப்பு. அதுவும் பேச நாங்கள் தயார் என்று கோட்டா அரசுக்குத் தகவல் தெரிவித்து விட்டு, வழி மேல் விழி வைத்து பதிலுக்குக் காத்திருந்த கூட்டமைப்பு இப்போது பேசப் போகின்றது – நாளை.

இந்தப் பேச்சுக்கான அழைப்பு கூட்டமைப்புக்கு ஒரு வாரத்துக்கு முன்னரே வழங்கப்பட்டு விட்டது. கடந்த எட்டாம் திகதியே தன்னுடைய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கு வரும் 16 ஆம் திகதி சந்திப்பு என்று கோடி காட்டி விட்டார் சம்பந்தன். ஆனால் விடயத்தை கமுக்கமாக அமுக்கிக் கொள்ளுமாறும் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

ஆக, நாளைக்கு நேரடிப் பேச்சு. இன்று மெல்ல விடயத்தை அவிழ்க்கின்றார் கூட்டமைப்புப் பேச்சாளர். அதுவும் பத்திரிகையாளர் நோண்டிய பின்னர். ஆரம்பத்தில் நேரடிப் பேச்சு நடக்கப் போகின்றது என்பதை உறுதிப்படுத்த பின்னடித்த அவர், பேச்சுக்கு முதல் நாள் விடயத்தை ஒப்புக் கொண்டு, இது குறித்து மட்டும்தான் பேசுவோம் என்று நிபந்தனை விடயம் பற்றிப் பிரச்தாபிக்கின்றார்.

இது ஒரு முக்கியமான சமயம். பேச்சுக்குக் கூட்டமைப்பை அழைத்திருக்கின்றார் ஜனாதிபதி கோட்டாபய. அவருடன் பேசுவது என்று கூட்டமைப்பு தீர்மானித்திருக்கின்றது. பங்காளிக் கட்சித் தலைவர்களுக்கும் நேரத்துடன் சொல்லியிருக்கின்றது.

ஆனால், பேச்சுக்கான அழைப்பு வந்திருப்பது பற்றியோ, பேசவிருப்பது பற்றியோ, தமிழ் மக்களுக்கு கடைசி நேரம் வரை மூச்சுக் கூட விடவில்லை கூட்டமைப்பு.

ஏன் இந்த மறைப்பு? ஏன் இந்த ஒளிப்பு? அரசுடன் பேசப் போகின்றமையை ஒரு வாரமாக மறைத்து வைக்கும் நீங்கள், அரசுடன் பேசுகின்ற விடயங்களையும் கூட மறைக்க மாட்டீர்கள் என்று மக்கள் எப்படி நம்புவார்கள்? இதில் வெளிப்படைத் தன்மையை மறுத்து, மறைப்பு முயற்சி மேற்கொண்டமைக்குக் காரணம் என்ன?

மற்றைய விடயங்களுக்கு எல்லாம் ஒற்றுமைப்பட்டு செயற்பட வேண்டும், ஐக்கியப்பட்டுப் போராட வேண்டும், மாகாண முதலமைச்சர் பதவி கிட்ட வேண்டுமானால் சேர்ந்தியங்க வேண்டும் என்றெல்லாம் வலியுறுத்தியும், திட்டமிட்டும் இயங்கும் தமிழ்க் கூட்டமைப்பு, அரசுடன் – அரசுத் தலைவருடன் – பேசப் போகின்றோம் என்ற செய்தியை நேரத்துடன் வெளிப்படுத்தினால், அந்தப் பேச்சுகளில் அதைப் பேசுங்கள், இதைப் பேசுங்கள் என்றெல்லாம் மற்றைய தமிழர் தரப்புகள், கட்சிகள் வற்புறுத்தி, வலியுறுத்தி தொல்லை தரும் என்று கருதித் தான் இந்தத் தகவலை கடைசி நேரம் வரை கூட்டமைப்புத் தலைமை மறுத்ததா?

அல்லது தமிழ்த் தரப்போடு பேசுவது ஜனாதிபதி கோட்டாபயவிற்கு நெருக்கடி ஏற்படுத்தும் என்ற கருத்தில் அவருக்கு த் தெற்கில் அரசியல் பாதுகாப்பு வழங்குவதற்காக இந்தச் செய்தியை கூட்டமைப்பு அமுக்கி வாசித்ததா?

## பயணக் கட்டுப்பாடு நீக்கம் பற்றி பி.சி.ஆர். முடிவுக்கமைய தீர்மானம்



பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவதா இல்லையா என்பது இந்த வாரம் நடத்தப்படும் பி.சி.ஆர். பரிசோதனைகளின் முடிவுகளுக்கு அமையவே தீர்மானிக்கப்படும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

தற்போதைய அமுலில் உள்ள பயணக் கட்டுப்பாடுகளில் பிரதிபலன் கிடைக்க வேண்டுமாயின் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் செல்லும்.

பி.சி.ஆர். பரிசோதனைகளை செய்யும் முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களை அன்டிஜன் பரிசோதனையின் பின்னர் விடுவிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

அன்டிஜன் பரிசோதனையின் மூலம் சமூகத்தில் ஆபத்தானவர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

இந்தபரிசோதனைகளின்மூலம்கொரோனா வைரஸ் சமூகத்திற்குள் பரவியுள்ளதா என்பதை அறிய முடியும் எனவும் குணவர்தன குறிப்பிட்டுள்ளார்.

## துஷ்பிரயோகம் செய்யப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம்

### குற்றச்சாட்டை மறுக்கும் அரசு



பயங்கரவாதத் தடைச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மை சமூகங்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்தி வருவதாக ஐரோப்பிய ஒன்றியம் குற்றம் சுமத்தியிருந்தது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் நேற்று (திங்கட்கிழமை) வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்தன இந்தக் குற்றச்சாட்டுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றில் கடந்த 10 ஆம் திகதி இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருத்தமளிப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொடிய பயங்கரவாதம் தலைதூக்கிய காரணத்தால் பயங்கரவாத தடைச்சட்டம் அமுல்படுத்தப்பட்டது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் சில விடயங்களை திருத்தி அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் இது தொடர்பில் ஐக்கிய ஒன்றியத்துக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திட்டமிட்ட அடிப்படையில் சிறுபான்மை சமூகத்தினரை ஒடுக்குவதற்குப் பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுவதாகச் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை எனத் தெரிவித்துள்ளார்.

## மன்னார் - வங்காலை கடற்கரையில் உயிரிழந்த கடலாமை கரையொதுக்கம்



மன்னார் – வங்காலை கடற்கரையில் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தான பொருள்கள் என சந்தேகிக்கப்படும் சில பொருள்கள் மன்னார், வங்காலை மற்றும் சிலாபத்துறை கடற்கரைகளில் கரையொதுங்கின.

இந்த நிலையில் ஓடுகள் கடுமையாக சிதைவுற்ற நிலையில் கடலாமை ஒன்று உயிரிழந்துள்ள நிலையில் வங்காலை கடற்கரையில் கரையொதுங்கியுள்ளது.

கடந்த வாரம் சிலாபத்துறை கடற்கரையிலும் உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று கரை ஒதுங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்குமாறு அரசிடம் கோரிக்கை முன்வைப்பு

மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளன உபதலைவரும் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமரச தலைவருமான வர்ணகுலசிங்கம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று (திங்கட்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர் –

அண்மைய நாள்களில் கொழும்பில் கப்பல் ஒன்றில் ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாக மீன் விற்பனை மிகவும் குறைந்துள்ளது

இந்த நிலையிலும், மீன்களின் விலையும் மிக மிக குறைந்துள்ள நிலையிலும் தற்போது மண்ணெண்ணெய் விலை அதிகரித்துள்ளது. இதனால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், தற்போதைய பயணக்கட்டுப்பாடுகள் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் விலை உயர்வு மிகவும் பாதிப்பாக அமைந்துள்ளது.

இதனால் கடந்த காலங்களைப் போன்று மீனவர்களுக்கான மானிய மண்ணெண்ணெய் வழங்கும் திட்டத்தை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மீன்பிடி அமைச்சர் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.– எனத் தெரிவித்துள்ளார்.



## இங்கிலாந்தில் மேலும் 4 வாரங்களுக்கு பிறகே ஊரடங்கில் தளர்வுகள்

இங்கிலாந்தில் சமீப நாள்களாக கொரோனா பாதிப்பு புதிய உச்சத்தை எட்டியிருக்கிறது. குறிப்பாக, இந்தியாவில் முதலில் கண்டறியப்பட்ட டெல்டா மாறுபாடு கொரோனா வைரஸ் அங்கு வேகமாகப் பரவிவருகிறது. அங்கு தினசரி கொரோனா பாதிப்பு 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரை இருந்து வருகிறது. இந்தப் புதிய பாதிப்புகளில் 90 சதவீதம் டெல்டா மாறுபாடு கொரோனா வைரஸ் என்று இங்கிலாந்து சுகாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

இதற்கிடையே, இங்கிலாந்தில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முன்னர் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு கட்டுப்பாடுகளை வரும் 21 ஆம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவர அரசு திட்டமிட்டிருந்தது.

இந்நிலையில், கொரோனா பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளதை கருத்தில் கொண்டு பிரதமர் போரிஸ் ஜான்சன் மேலும் 4 வாரங்களுக்கு ஊரடங்கை நீடிப்பதாக அறிவித்துள்ளார். ஜுலை 19 ஆம் திகதிக்குப் பிறகே ஊரடங்கில் தளர்வுகள் இருக்கும் என்று போரிஸ் ஜான்சன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக போரிஸ் ஜான்சன் கூறுகையில், கொரோனா வைரஸ் வேகமாகப் பரவும் சூழலில் இரண்டாவது டோஸ் தடுப்பூசியை மேலும் பலருக்கு செலுத்த அனுமதிக்கும் வகையில் தளர்வுகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளன. ஊரடங்கை மேற்கொண்டு நீடிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்ற நம்பிக்கை உள்ளது என தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் பழமை வாய்ந்த இந்து கோவிலை இடிக்க தடை

## உச்ச நீதிமன்றம் உத்தரவு



பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தின் தலைநகர் கராச்சியில் கடந்த 1932 ஆம் ஆண்டு கட்டப்பட்ட பழமை வாய்ந்த இந்து கோவில் ஒன்று உள்ளது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு, சிந்து மாகாணத்தின் அறக்கட்டளை சொத்து வாரியம், கராச்சியில் இந்து கோவில் அமைந்துள்ள நிலத்தை தனியாருக்கு குத்தகைக்கு விட்டது.

அந்த தனிநபர் கோவிலை இடித்து விட்டு அங்கு புதிய கட்டடத்தை எழுப்ப முடிவு செய்தார்.

இதனை எதிர்த்து சிறுபான்மையினர் நலனுக்கான ஒரு நபர் ஆணையம் சிந்து மாகாண உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தது. இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், இந்து கோவிலை இடிக்க அனுமதி வழங்கி கடந்த 2014 ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது.

இந்த தீர்ப்பை எதிர்த்து சிறுபான்மையினர் நலனுக்கான ஒரு நபர் ஆணையம் பாகிஸ்தான் உச்ச நீதிமன்றில் மேல்முறையீடு செய்தது. இந்த நிலையில் சுப்ரீம் கோர்ட்டில் 3 நீதிபதிகளை கொண்ட அமர்வு முன்பு இந்த வழக்கின் இறுதி விசாரணை கடந்த வெள்ளிக்கிழமை நடந்தது.

இருதரப்பு வாதங்களை கேட்ட நீதிபதிகள் கராச்சியில் உள்ள இந்துக் கோவிலை இடிப்பதற்கு தடை விதித்து தீர்ப்பளித்தனர்.

மேலும் அந்த இந்துக் கோவிலை பாரம்பரிய சொத்தாக பராமரிக்க கராச்சி நகர நிர்வாகத்துக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# அமெரிக்காவில் மேலும் ஒரு கொரோனா தடுப்பூசி 90.4 சதவீத செயல்திறன் கொண்டது என அறிவிப்பு

அமெரிக்காவில் பைஸர், மாடர்னா, ஜான்சன் அண்ட் ஜான்சன் ஆகிய மூன்று தடுப்பூசிகள் அவசர கால பயன்பாடு என்ற அளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் நோவாவேக்ஸ் என்ற நிறுவனம் கொரோனாத் தடுப்பூசியை கண்டுபிடித்துள்ளதாக அறிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் மெக்சிக்கோவில் சுமார் 29,960 பேரிடம் பரிசோதனை செய்யப்பட்டதில் மிதமான, கடுமையான நோயில் இருந்து 100 சதவீதம் பாதுகாக்கும் என்றும், 90.4 சதவீத செயல்திறன் கொண்டது என்றும், உருமாற்றம் அடைந்த கொரோனாவிற்கு எதிராக சிறப்பாக செயல்படுகிறது என்றும் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் தடுப்பூசிக்கான தேவை பலமடங்கு குறைந்துள்ளது. ஆனால் பல நாடுகளில் அதற்கு கேள்வி உள்ளது. எனவே, அமெரிக்க மருந்து கட்டுப்பாட்டு துறையின் அனுமதி கிடைத்தவுடன், வளர்ந்து வரும் நாடுகளுக்கு அதை விற்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இந்த தடுப்பூசியை இருப்பு வைப்பதும் எடுத்துச் செல்வதும் சுலபம் எனவும் நோவாவேக்ஸ் தெரிவித்துள்ளது. இந்த தடுப்பூசியை இந்தியாவில் சீரம் இந்தியா நிறுவனம் தயாரிக்கும் என கூறப்படுகிறது.

2021 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் அனுமதி பெற்று விடுவோம் என்றும், காலாண்டு இறுதியில் மாதத்திற்கு 10 கோடி டோஸ்களும், ஆண்டு இறுதி காலண்டிற்குள் மாதத்திற்கு 15 கோடி டோஸ்கள் தயாரிக்க முடியும் என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் சீரம் இன்ஸ்டிடியூட் ஆப் இந்தியா நோவாவேக்ஸ் தடுப்பூசியை தயாரிக்கும் உரிமையை பெறும் எனத் தெரிகிறது.



## மாஸ்க் அணியாத பிரேஷில் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவுக்கு அபராதம்

கொரோனா வைரஸ் தொற்றால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் பிரேஷிலும் ஒன்று. அங்கு இதுவரை 1 கோடியே 74 லட்சத்துக்கும் அதிகமானோருக்கு வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், சுமார் 4 லட்சத்து 87 ஆயிரம் பேர் கொரோனாவுக்கு பலியாகியுள்ளனர்.


அந்த நாட்டின் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவின் அலட்சியப் போக்கே இந்த சுகாதார நெருக்கடிக்கு காரணம் என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது.

ஆரம்பத்தில் இருந்தே கொரோனா வைரஸை சாதாரண காய்ச்சலுடன் ஒப்பிட்டுப் பேசி வரும் போல்சனாரோ, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த ஊரடங்கை அமுல்படுத்துவது, மாஸ்க் அணிவது மற்றும் சமூக இடைவெளியை கடைபிடிப்பது போன்றவை அவசியமற்றவை என்று கூறி வருகிறார். இதனால் பல்வேறு தரப்பில் இருந்தும் அவர் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், சா பவுலா மாகாணத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அதிபர் ஜெய்ர் போல்சனாரோ ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களுடன் மாஸ்க் அணியாமல் வாகன பேரணியில் ஈடுபட்டார்.

இதையடுத்து சா பவுலா மாகாணத்தின் நிர்வாகம், கொரோனா தடுப்பு விதிமுறைகளைமீறி மாஸ்க் அணியாமல் அதிக அளவில் ஆட்களைத் திரட்டி பேரணியில் ஈடுபட்டார் எனக்கூறி அதிபர் போல்சனாரோவுக்கு 100 அமெரிக்க டொலர் (இலங்கை மதிப்பில் சுமார் ரூ.20,000) அபராதம் விதித்துள்ளது.

## ரஷ்யாவுடன் நல்ல உறவை பேண விரும்புகிறேன்: பைடன்




அமெரிக்க அதிபர் ஜோபைடன் சமீபத்தில் ஜெனிவாவில் ரஷ்ய அதிபர் புடினை சந்தித்தார்.

இது குறித்து ஜோபைடன் கூறியிருப்பதாவது:-

ரஷ்யாவுடன் மோதிக் கொள்வதை நான் விரும்பவில்லை. இரு நாடுகளும் நல்ல உறவுடன் இருக்கவே விரும்புகிறேன். ரஷ்யாவுடன் சிறந்த உறவை பெறுவதற்கான நிபந்தனைகள் என்ன என்பதில் தெளிவாக இருக்கிறோம். மோதல் போக்கு வேண்டாம் என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.






# இந்தியாவில் புதிய 'டெல்டா பிளஸ்' வகை கொரோனா கண்டுபிடிப்பு!

## கூர்முனைப் புரதத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் ஆபத்தானதாக இருக்கலாம்

மனிதகுலத்தை மிரட்டிவரும் கொரோனா வைரஸ், புதிது புதிதாகவும் உருவெடுத்து குழப்பத்தை ஏற்படுத்துகிறது. அந்த வரிசையில், அதிகமாகப் பரவும் தன்மையுள்ள டெல்டா வகையைச் சார்ந்த 'சார்ஸ்–கொரோனா வைரஸ் 2' என்பது மேலும் உருமாறி, 'டெல்டா பிளஸ்' ஆக மாறியுள்ளது என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். ஆனால், ஆறுதல் அளிக்கும் வகையில் இந்த வகை வைரஸானது இந்தியாவில் தற்போது குறைவாகவே காணப்படுவதால் உடனடி கவலைக்கு அவசியம் இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்தியாவில் மிக மோசமான இரண்டாவது அலைக்கு முக்கிய காரணமான டெல்டா வகைக் கொரோனா வைரஸ்தான் மேலும் உருமாறி புதிய டெல்டா பிளஸ் வகையாக தோன்றியுள்ளது. தற்போதைய புதிய மாற்றம், சார்ஸ்–கொரோனா வைரஸ் 2 இன் கூர்முனைப் புரதத்தில் ஏற்பட்டுள்ளதாகவும், அது மனித செல்களில் நுழையவும், பாதிப்பை ஏற்படுத்தவும் இந்த புதுவகை வைரஸ்க்கு உதவுவதாகவும் டெல்லியில் உள்ள மரபியல் மற்றும் ஒருங்கிணை உயிரியல் நிறுவன விஞ்ஞானி வினோத் ஸ்காரியா தெரிவித்திருக்கிறார். புதிதாக மாற்றமடைந்துள்ள கொரோனா வகை குறித்து உடனடியாக அதிகம் கவலைப்படத் தேவையில்லை என்றாலும், அதைத் தொடர்ந்து கண்காணித்து வருவது அவசியம் என்பதே விஞ்ஞானிகளதும் மருத்துவ நிபுணர்களதும் ஒட்டுமொத்தக் கருத்தாக உள்ளது.

# இராமர்கோயில் கட்ட நிலம் வாங்கியதில் 16.5 கோடி அதிகமாகக் கொடுத்து ஊழல்

## ராமஜென்மபூமி அறக்கட்டளைமீது பல தரப்பாலும் குற்றச்சாட்டு

2019 ஆம் ஆண்டு நவம்பர் 9 ஆம் திகதி இந்தியாவின் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி அயோத்தியில் ராமர் கோயில் கட்டப்பட்டு வருகிறது. இதற்காகப் பிரச்சினைக்குரிய நிலம் மட்டுமன்றி அதைச் சுற்றியுள்ள பல பகுதிகளிலும் ராமர் கோயில் அறக்கட்டளை சார்பில் நிலங்கள் வாங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ஒரு வாங்கல் நடவடிக்கை மீது புகார் எழுந்துள்ளது.



ராமர் கோயில் அறக்கட்டளை மீது இந்த ஊழல் புகார் சுமத்தப்பட்டுள்ளது. இதன் சார்பில் 18.5 கோடி ரூபாவில் வாங்க ஒப்பந்தமிடப்பட்ட நிலம், சில நிமிடங்களுக்கு முன் வெறும் இரண்டே கோடி ரூபாவில் விற்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. எனவே, 16.5 கோடி ரூபா அதிகம் கொடுத்து அந்த நிலத்தை வாங்கி, அதில் இலாபம் சம் பாதிப் பதற்கு குறித்த அறக்கட்டளையைச் சேர்ந்தவர்கள் முயற்சித்திருக்கின்றமை அம்பலமாகியுள்ளது.

இந்தப் புகாரை உத்தரபிரதேச முக்கிய எதிர்க்கட்சியான சமாஜ்வாதி கட்சியின் முன்னாள் அமைச்சர் பவண் பாண்டே எழுப்பி யுள்ளார். அவரது புகாரின்படி, அயோத்தியின் பிஜேஷ்வர் தோப்பில் இருக்கும் குறித்த நிலம், பாபா ஹரிதாஸ் என்பவருக்குச் சொந்தமானது.

இந்த நிலத்தை அவர், கடந்த மார்ச் 18 ஆம் திகதி உள்ளூரின் சுல்தான் அன்சாரி, ரவி மோகன் திவாரி ஆகிய இருவருக்கும் 2 கோடிக்கு விற்பனை செய்துள்ளார். இந்த விற்பனையைப் பற்றி ராமர் கோயில் தீர்த்த ஷேத்ரா அறக் கட்டளையின் நிர்வாகக் குழு உறுப்பினரான டாக்டர் அனில் மிஸ்ரா மற்றும் அயோத்தியின் மேயர் ரிஷிகேஷ் உபாத்யா ஆகியோருக்கு தெரிந்துள்ளது. இதைத்தொடர்ந்து அதே நிலத்தை சுல்தான் மற்றும் மோகன் திவாரி இரவரும் இணைந்து ராமர் கோயில் அறக்கட்டளைக்கு 18.5 கோடிக்கு விற்றுள்ளனர். இதற்கான தொகை சுல்தான் மற்றும் மோகன் திவாரியின் வங்கிக் கணக்குகளுக்கும் மாற்றப்பட்டுள்ளது.

இந்த நிலவரம் குறித்து சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும் என சமாஜ்வாதி கட்சி கோரியுள்ளது. இதே புகாரை ஆம் ஆத்மி கட்சியினரும் எழுப்பியுள்ளனர்.

இதுகுறித்து பா.ஜனதா முன்னாள் மத்திய அமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸின் மூத்த தலைவருமான யஷ்வந்த் சின்ஹா தனது டுவிட்டர் பக்கத்தில், "ராமரையும் விட்டு வைக்காதவர்கள் மீதம் வைத்திருப்பது என்ன? மோடி இருந்தால் அனைத்தும் சாத்தியம்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் ஊழல் நடந்ததாகக் கூறப்பட்டதையடுத்து உத்தரப்பிரதேச மகளிர் காங்கிரஸ் அணியினர் முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் இல்லத்தின் அருகே ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதன்போது, மகளிர் காங்கிரஸின் மாநில பிரிவுத் தலைவர் பிரதிபா அச்சால் பால் தலைமையிலான பெண் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர். பெண் போராட்டக்காரர்களை பொலிஸார் தவறாகக் கையாண்டனர் எனவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ராமர் கோயில் நில முறைகேடு விவகாரத்தில் விசாரணை நடத்தி அறிக்கை அளிக்க ராமஜென்மபூமி அறக்கட்டளைக்கு உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் உத்தரவிட்டுள்ளார்.

# மாணவிகளைப் பாலியல் கொடுமை செய்த சிவசங்கர் பாபா

## கைது செய்ய தனிப்படை பொலிஸார் உத்தரகாண்ட்டுக்கு விரைவு

கேளம்பாக்கம் சுஷில் ஹரி பள்ளி நிர்வாகி சிவசங்கர் பாபாவை கைது செய்ய சி.பி.சி.ஐ.டி. தனிப்படை பொலிஸார் உத்தரகாண்ட் மாநிலம் டேராடூன் விரைந்துள்ளனர்.

சென்னையை அடுத்து அமைந்துள்ள கேளம்பாக்கத்தில் செயல்பட்டு வரும் சுஷில்ஹரிபாடசாலையின் நிறுவனர் சிவசங்கர் பாபா மீது அப்பள்ளியின் முன்னாள் மாணவிகள் பாலியல் துன்புறுத்தல் புகார்களை தெரிவித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து மாநில சிறுவர் உரிமை பாதுகாப்பு ஆணையம் கடந்த 11 ஆம் திகதி சிவசங்கர் பாபா உள்ளிட்ட பள்ளி நிர்வாகிகள் 6 பேரும் நேரில் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பியது.

இதனையடுத்து, சென்னையில் உள்ள சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தில், சுஷில் ஹரி பாடசாலையின் நிர்வாகிகளான நாகராஜன், வெங்கட்ராமன் உட்பட 3 பேர் நேரில் ஆஜராகினர். ஆனால், சிவசங்கர் பாபா உட்பட 3 பேர் ஆஜராகவில்லை. சிவசங்கர் பாபா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் எனக்கூறி அவருக்குப் பதிலாக வழக்கறிஞர் ஆஜராகியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து, பாடசாலை மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்ததாக வந்த புகாரில் கேளம்பாக்கம் பொலிஸார் சிவசங்கர் பாபா மீது போக்சோ உள்ளிட்ட 3 பிரிவுகளின் கீழ் நேற்று முன்தினம் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கு சி.பி.சி.ஐ.டி விசாரணைக்கும் மாற்றப்பட்டது.



இந்த நிலையில், சிவசங்கர் பாபா உத்தர காண்ட் மாநிலம் டேராடூனில் உள்ள ஒரு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என சி.பி.சி.ஐ. டி. பொலிஸாருக்கு ரகசியத் தகவல் கிடைத்திருக்கிறது.

இதனையடுத்து, சிவசங்கர் பாபாவைக் கைது செய்ய தனிப்படை பொலிஸார் டேராடூன் விரைந்துள்ளனர். குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர் வெளிநாட்டுக்குத் தப்பிச்செல்லாமல் இருக்கவிமானநிலையங்களுக்கு எச்சரிக்கை அறிவித்தல் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


# சாராய மாஃபியா குறித்து செய்தி வெளியிட்ட செய்தியாளர் மர்மமான முறையில் உயிரிழப்பு

## கொலை என மனைவி குற்றச்சாட்டு!

உத்தரப் பிரதேசத்தில் சாராய கடத்தல் மாஃபியா குறித்து செய்தி வெளியிட்ட செய்தியாளர் விபத்தில் உயிரிழந்தார் எனக் கூறப்படும் நிலையில் இது திட்டமிடப்பட்ட படுகொலை என்று அவரது மனைவி குற்றஞ்சட்டியுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் பிரதாப்ஹர் மாவட்டத்தைச் சேர்ந்தவர் சுலப் ஸ்ரீனிவஸ்தா. இவர் பிரபல இந்தி செய்தித் தொலைக்காட்சி நிறுவனத்தில் செய்தியாளராகப் பணியாற்றினார். பிரதாப்ஹர் மாவட்டத்தில் சட்டவிரோதமாகச் செயல்பட்டு வரும் சாராயக் கடத்தல் மாஃபியா கும்பல் குறித்து கடந்த சில மாதங்களக ரகசிய தகவல்களை சேகரித்து, தான் பணியாற்றும் செய்தி நிறுவனத்திற்கு அனுப்பியுள்ளார்.

அவர் சேகரித்து அனுப்பிய 'சாராய மாஃபியா' குறித்த புலனாய்வுச் செய்தி கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஒளிபரப்புச் செய்யப்பட்டது. இந்தச் செய்தி உத்தரபிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து கடந்த சில நாள்களாக ஸ்ரீனிவஸ்தாவிற்கு சாராய மாஃபியா கும்பலிடம் இருந்து கொலை மிரட்டல்கள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலை மிரட்டல்களைத் தொடர்ந்து தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாகவும் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக் கும்படியும் 12 ஆம் திகதி ஸ்ரீனிவஸ்தா காவல்துறையில் புகார் அளித்துள்ளார்.



சட்டவிரோத ஆயுத உற்பத்தித் தொழிற்சாலையொன்று குறித்து செய்தி சேகரிப்பை முடித்துவிட்டு தனது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிகொண்டிருந்தபோது மர்மமான முறையில் விபத்தில் சிக்கி ஸ்ரீனிவஸ்தா உயிரிழுந்துள்ளார். ஸ்ரீனிவஸ்தா தனது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது சாலை அருகே அமைக்கப்பட்டிருந்த தண்ணீர்க் குழாய் மீது மோதி பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த செங்கல் அடுக்குகள் மீது வேகமாக மோதி விபத்துக்குள்ளானார் எனவும், இந்த விபத்தில் படுகாயமடைந்த ஸ்ரீனி வஸ்தா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனவும் காவல்துறைத் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், தனது கணவரை சாராய கடத்தல் கும்பல் திட்டமிட்டுக் கொலை செய்ததாக ஸ்ரீனிவஸ்தாவின் மனைவி ரேனுகா குற்றஞ்சாட்டியுள்ளார். மேலும், தனது உயிருக்கு ஆபத்து உள்ளது என தனது கணவர் புகார் அளித்த போதும் அந்தப் புகார் மீது காவல்துறையினர் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் ரேனுகா குறிப்பிடுள்ளார். ஊடகவியலாளர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற நிலையில், காங்கிரஸ் கட்சியின் பிரியங்கா காந்தி, திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் யோகி ஆதித்யநாத் தலைமையிலான உத்தரப் பிரதேச பா.ஜ.க. அரசு மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மணல் ஏற்றும் பாரவூர்திகள் எத்தகைய முறையில் அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்கப்பட்டன

## நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் கேள்வி



நாட்டில் அதிதீவிர பயணக்கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருக்கும் தற்காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பிற்கு வரும் வாகனங்களில் பெருமளவானவை மணல் ஏற்றும் பாரவூர்திகளாகும்.

அவை எவ்வாறு அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்கப்பட்டன என்று தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதேவேளை இராணுவத்தின் மூலம் இந்தத் தொற்று நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று ஜனாதிபதியும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் நம்பியதிலிருந்துதான் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தோல்வியடைய ஆரம்பித்தன என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலுடனான நெருக்கடி நிலையில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பான குழுக் கலந்துரையாடலொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் கூறியதாவது:

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தல் என்பது தற்போதைய அரசாங்கத்தினால் ஒரு 'அரசியல் கருவி'யாகப் பயன்படுத்தப்படுகின்றது.

நாட்டில் இந்தத் தொற்றுநோய் பரவத்தொடங்கியபோது, 'போரை வெற்றிகொண்ட எமக்கு இதனைக் கையாள்வது பெரிய விடயமல்ல' என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

அதுவே தொடக்கப்புள்ளியாக அமைந்தது. அதனைத்தொடர்ந்து இந்த கொவிட் – 19 பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்தவொரு தரப்பினருக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகவே இருந்துவருகின்றன.

இந்த சவாலை எதிர்கொள்வதற்கு ஆளுந்தரப்பினரால் முறையான கொள்கைகளும் செயற்திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை.

அதேபோன்று வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் அரசாங்கத்திற்கு உதவுவதற்கான நடவடிக்கைகளை எதிர்த்தரப்பும் மேற்கொள்ளவில்லை. அதேவேளை இதுவிடயத்தில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளில் தலையீடு செய்வதற்கான இயலுமையும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்படுகின்றது.

இக்காலப்பகுதியில் இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கு உதவக்கூடிய பல்வேறு புதிய நடவடிக்கைகளையும் திட்டங்களையும் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இளைஞர், யுவதிகள் பரிந்துரை செய்திருக்கிறார்கள்.

ஆனால் இராணுவத்தின் மூலம் இந்தத் தொற்றுநோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என்று ஜனாதிபதியும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் நம்பியதிலிருந்துதான் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் தோல்வியடைய ஆரம்பித்தன.

வைரஸ் பரவலை ஒருபோதும் துப்பாக்கியைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்த முடியாது. மாறாக அதற்கேற்றவாறான செயற்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக இந்த நெருக்கடிமிக்க காலப்பகுதியில் நாடளாவிய ரீதியில் பல்வேறு அடக்குமுறைசெயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் விவகாரத்தைப் பொறுத்தவரையில் ஆரம்பத்திலிருந்தே பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளல், தனிமைப்படுத்தல் நடவடிக்கைகள், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கான உணவுப்பொருள் வழங்கல், தடுப்பூசி வழங்கல் உள்ளடங்கலாக அனைத்து விடயங்களையும் அரசாங்கம் முறையாகத் திட்டமிடவோ, நிர்வகிக்கவோ இல்லை. இவ்வனைத்து விடயங்களிலும் அதிகளவான அரசியல் தலையீடுகளும் ஊழலுமே காணப்பட்டன.

நாட்டில் அதிதீவிர பயணக்கட்டுப்பாடுகள் நடைமுறையிலிருக்கும் தற்காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பிற்கு வரும் வாகனங்களில் பெருமளவானவை மணல் ஏற்றும் லொறிகளாகும். அவை எவ்வாறு அத்தியாவசிய சேவைக்குள் உள்ளடக்கப்பட்டன என்பது புரியவில்லை.

அதேபோன்று மணல் அகழும் பகுதியில் சுமார் நூற்றுக்கணக்கான லொறிகள் நிறுத்தப்பட்டிருப்பதுடன் அவை மணலை ஏற்றிக்கொண்டு நாட்டில் பலபாகங்களுக்கும் செல்கின்றன.

மேலும் தடுப்பூசி வழங்கல் நடவடிக்கையை எடுத்துக்கொண்டால், நாட்டின் பெரும்பாலான மக்களைப் புறந்தள்ளும் நடவடிக்கையாகவே அதனைக் கருதமுடியும். வங்கிச்சேவை அத்தியாவசிய சேவையாக இருக்கும் நிலையிலும்கூட, மட்டக்களப்பு மாவட்டத்தில் வங்கி ஊழியர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

பிள்ளையான் என அறியப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவருக்கு நெருக்கமானவர்களுக்குத் தடுப்பூசியை வழங்குமாறு கடிதங்களைக் கொடுத்திருக்கிறார்.

அவ்வாறிருக்கையில் அதுகுறித்து ஆராயாமல் அத்தியவாசிய சேவையில் பணியாற்றுவோருக்கு தடுப்பூசியை வழங்க மறுப்புத்தெரிவிப்பது ஏன்? ஆகவேகொவிட் –19 கட்டுப்பாட்டைப்பொறுத்தவரையில் அனைத்து விடயங்களிலும் அரசாங்கம் தோல்வியடைந்திருக்கிறது என்றே கூறவேண்டும் என்றார் .

# முதியோர்களுக்கான உலர் உணவு வழங்கல்

## ஆலையடிவேம்பில்

கொவிட் 19 மூன்றாம் அலையின் காரணத்தினால் ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட 70 வயதிற்கு மேற்பட்ட பொது நலன் உதவி பெறும் வருமானம் குறைந்த முதியோர்களுக்கான உலர் உணவுப்பொதிகள் இன்று வழங்கி வைக்கப்பட்டன.

புலம்பெயர் உறவுகள் மற்றும் உள்ளூர் உறவுகள், அரச உத்தியோகத்தர்கள் உள்ளிட்டவர்களின் நிதியீட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களே இன்று ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பினரின் உதவியுடன் வழங்கி வைக்கப்பட்டன.

1,600 ரூபா பெறுமதியான 250 பொதிகள் பிரதேச செயலகத்தில் கையளிக்கப்பட்டதுடன் பிரதேச செயலாளரின் அறிவுறுத்தலுக்கு அமைய கிராமங்கள் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள முதியவர்களுக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்டன.

முற்றிலும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்ற நிவாரணம் வழங்கும் பணியில் ஆலையடிவேம்பு பிரதேச சமூக நலன் அமைப்பினர் மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கண்காணிப்பில் ஈடுபட்டதுடன் பொதுமக்களின் வீடுகளுக்கு கொண்டு சென்றும் கையளித்தனர்.

இதேநேரம் தொடர்ந்தும் இப்பணி முன்னெடுக்கப்படும் நிலையில் பயணத்தடை காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் அதிகளவான மக்கள் நிவாரணத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.





# பெரியநீலாவணையில் இராணுவத்தினரின் வீடமைப்புத்திட்டம்

இராணுவத்தினருக்கும் பொது மக்களுக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்தும் முகமாக அம்பாறை மாவட்டத்தில் 241 ஆவது படையணியின் பிரிகேடியர் விமல்ஜனக விமலரத்ன வழிகாட்டலில் பல்வேறு திட்டங்கள் இங்கு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய கல்முனை வடக்கு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பெரியநீலாவணைக் கிராமத்தில் வறுமைக்கோட்டிற்குட்பட்ட ஐந்து பிள்ளைகளின் தந்தையான கைலாயப்பிள்ளை நாகராசா என்பவரின் குடும்பத்திற்கு எட்டு (08) இலட்சம் ரூபா பெறுமதியில் வீடு ஒன்றை அமைத்துக் கொடுப்பதற்கு இராணு வத்தினர் முன்வந்துள்ளமையுடன் இதற்கான அடிக்கல் நாட் டும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் கல்முனை இராணுவமுகாம் பொறுப்பதிகாரி மேஜர் விஜயக்கோன், அக்கரைப்பற்று இராணுவ முகாம் பொறுப்பதிகாரி கேணல் புஸ்பஸ்ரீ, கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே.அதிசயராஜ் உட்பட இராணுவத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த வீடானது மூன்றுமாத காலத்திற்குள் கட்டிமுடிக்கப்படவுள்ளதாக கல்முனை பிரதேச இராணுவமுகாம் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

# கல்முனை ஆதார வைத்தியசாலையில் முதலாவது கொரோனா மரணம் பதிவு

கல்முனை ஆதார வைத்தியசாலையில் முதலாவது கொவிட் மரணம் நேற்று பதிவாகியுள்ளது.

கல்முனையையடுத்துள்ள மணல்சேனையைச் சேர்ந்த 85 வயதுடைய மூதாட்டி எஸ்.பூமணி என்பவரே அங்கு மரணமானவர்.

அவர் தனக்கேற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக இறுதி நேரத்தில் வைத்தியசாலைக்கு வந்துள்ளார்.

இவ்வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா.முரளீஸ்வரனிடம் இந்த முதலாவது மரணம் பற்றிக் கேட்டபோது இதுவரை காலமும் இவ்வாறானதொரு சம்பவம் இடம்பெறவில்லை. பலர் நோய் முற்றும் வரை வீடுகளில் இருந்து விட்டு இறுதிநேரத்தில் வருவதால் இத்தகைய துர்மரணங்கள் அநாவசியமாக ஏற்படுகின்றன.

எனவே யாராவது குணங்குறிகள் தென்பட்டால் எந்த வயதுப்பிரிவினராக இருந்தாலும் உடனடியாக வைத்தியசாலையை நாடவேண்டியது கட்டாயமாகும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு




# உலகிலேயே மிகப் பெரிய குடும்பத்தின் தந்தை மரணம்



## 39 மனைவிமார் 94 குழந்தைகள் 33 பேரக்குழந்தை 14 மருமகள்கள்

உலகிலேயே அதிக திருமணம் செய்தவர் என்ற பட்டத்தை இந்தியாவில் உள்ள மிசோரம் மாநிலத்தைச் சேர்ந்த ஜின்சோகா அகாசி யோன் பெற்று இருந்தார்.


76 வயதான அவருக்கு 39 மனைவிகள் உள்ளனர். 94 குழந்தைகள், 33 பேரக் குழந்தைகளும் இருக்கின்றனர். மகன்கள் பலருக்கும் திருமணமாகி 14 மருமகள்களும் வீட்டில் இருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஜின்சோகா அகாசியோன் நேற்று திடீரென இறந்து விட்டார். ஏற்கனவே நீரிழிவு நோயால் அவதிப்பட்டு வந்த அவருக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது.

இதனால் 3 நாள்களாக ஊரிலேயே சிகிச்சை பெற்று வந்தார். ஆனால் அவரது உடல்நிலை மோசம் அடைந்தது. இதனால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். வழியிலேயே அவர் இறந்து விட்டார்.

அவர் மரணம் அடைந்தது மிசோரம் மக்களுக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மிசோரம் மாநில முதலமைச்சர் மற்றும் அரசியல் தலைவர்கள் அனைவரும் அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

முதலமைச்சர் சோரம் தங்கா வெளியிட்டுள்ள செய்தியில், உலகில் பெரிய குடும்பத்துக்கு தலைமை



தாங்கிய ஜின் சோகா அகாசி யோன் மரணம் மிசோரமுக்கு பேரழிப்பாகும். அவரால் இந்த பகுதி சுற்றுலா மையமாக திகழ்ந்தது. அவருடைய ஆத்மா சாந்தியடையட்டும் என்று கூறியுள்ளார்.

ஜின்சோகா அகாசியோன் தலைநகர் ஐஸ்பாலில் இருந்து 60 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பக்தவாங் என்ற கிராமத்தில் வசித்து வந்தார். இவர்கள் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய பூர்வீக ஊர் அதன் அருகில் உள்ளது.

1942ஆம் ஆண்டு அவருடைய தாத்தாவை அந்த கிராமத்தில் இருந்து வெளியேற உத்தரவிட்டனர். இதனால் பக்தவாங் பகுதிக்கு வந்து நிலத்தை வாங்கி அங்கு குடிஅமர்ந்தார். அவருக்கும் பல மனைவிகள் இருந்தனர். அவர் விவசாயம் செய்து வந்தார்.

அவருக்கு பிறகு மூத்த மகன் குடும்ப தலைவர் ஆனார். பின்னர் அவருடைய மூத்த மகனான ஜின்சோகா அகாசியோன் குடும்ப தலைவர் ஆனார். அவர்கள் சமூகத்தில் ஆண்கள் பல திருமணங்களை செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

அதன்படி ஜின்சோகா அகாசியோன் பல திருமணங்களை செய்து கொண்டார். நினைத்த போதெல்லாம் புதிதாக திருமணம் செய்து கொள்வது வழக்கம்.

ஒரு தடவை ஒரே ஆண்டில் 10 திருமணங்களை செய்து கொண்டார். அனைத்து மனைவிகள், மகன்கள், மகள்கள், பேரக் குழந்தைகள் என அனைவரும் ஒரே வீட்டில்தான் வசிக்கிறார்கள். இதற்காக 4 மாடிகள் கொண்ட பெரிய வீடு கட்டி இருந்தார்.




கிட்டத்தட்ட ஒரு தங்கும் விடுதி போல அந்த வீடு காணப்படுகிறது. சுமார் 1,000 பேர் வரை தங்கும் வசதி அங்கு இருக்கிறது. வீட்டின் மத்தியில் ஜின்சோகா அகாசியோன் படுக்கை அறை உள்ளது. இது இரட்டை படுக்கை கொண்டதாகும்.

இரவில் எந்த மனைவி அவரோடு தங்குவது என்பதில் ஜின்சோகா அகாசியோன் முடிவு செய்வார். பெரும்பாலும் சுழற்சி முறையில் மற்ற மனைவிகள் அவரோடு தங்குவார்கள்.

அவரது இளம் மனைவியின் அறை அவரது அறைக்கு பக்கத்தில் இருக்கும்படி அமைத்து இருந்தார். மற்ற மனைவிகளின் அறை சற்று தள்ளி இருக்கும்.

அனைவருக்கும் ஒரே சமையல் அறையில்தான் உணவு தயாரிக்கப்படும். ஒரு தடவை உணவு தயாரிப்பதற்கு 30 கோழி, 60 கிலோ உருளைக் கிழங்கு, 100 கிலோ அரிசி தேவைப்படும்.

குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து சமையல் செய்வார்கள். யாருக்கு என்ன வேலை என்பதை மூத்த மனைவி ஒதுக்கி கொடுப்பார். அவருடைய ஊரில் 400இற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் அனைவருமே இவருடைய உறவினர்கள் ஆவார்கள். அந்த ஊருக்கே அவர் தலைவராகவும் இருந்து வந்தார். அதிக பெண்களை திருமணம் செய்தவருக்கு அந்த ஊரில் அதிக மரியாதை கொடுக்கப்படுகிறது.

அந்த வகையில் சொந்த ஊரில் மட்டுமல்லாமல் சுற்றியுள்ள அனைத்து ஊர்களிலும் அவருக்கு செல்வாக்கு அதிகம். இந்த நிலையில் அவர் இறந்து விட்டமை அந்த பகுதி மக்களை கடும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளது. எங்கள் தலைவரை நாங்கள் இழந்து விட்டோம் என்று பலரும் கூறி கண்ணீர் வடித்தனர். இந்த குடும்பத்தை பார்ப்பதற்கு என்றே ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவது உண்டு. இதனால் அவருடைய ஊர் சுற்றுலா மையமாகவும் திகழ்ந்து வந்தது. ஜின்சோகா அகாசியோன் இறுதி சடங்கை சிறப்பாக செய்வதற்கு கிராம மக்கள் ஏற்பாடுகளை செய்து வருகிறார்கள்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# திருச்சி சிறப்பு முகாமில் தொடரும் போராட்டம் செல்வம் எம்.பி. ஸ்டாலினுக்கு அவசர கடிதம்!

திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்கள் நேற்று (திங்கட்கிழமை) ஆறாவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தம்மை விடுதலை செய்ய வேண்டும் இல்லையேல், கருணைக் கொலை செய்ய வேண்டும் என வலியுறுத்தியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இதுதொடர்பாகத் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் அவசர கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் -

இலங்கை வாழ் தமிழ் மக்கள் அயல் நாடான இந்தியத் தாய் திரு நாட்டில் அடைக்கலம் புகுந்த வேளையில் இது வரை காலமும் ஆற்றி வந்த அளப்பரிய நன்மைகளை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

மேலும் கொரோனாத் தொற்றைக் கருத்தில் கொண்டு முகாம்களில் வாழும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் சிரமங்களையும் கஷ்டங்களையும் தங்களது மேலான கவனத்துக்குக் கொண்டு வந்து அதற்கான தீர்க்கமான சாத்தியமான முடிவுகளை எடுக்குமாறு தங்களை வேண்டி நிற்கின்றேன்.

அத்தோடு இந்த குடும்பங்களின் ஒரு சில குடும்ப தலைவர்கள் திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தங்களது குடும்ப அங்கத்தவர்களுடன் இணைந்து தங்கள் வாழ்க்கையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளனர்.

முகாம்களில் வாழும் தமிழ் மக்களின் நலன்களைக் கருத்தில் கெண்டும், திருச்சி சிறப்பு சிறைச்சாலையில் தங்களது விடுதலை தொடர்பாக சாகும் வரை உண்ணா



விரதம் மேற்கொள்ளும் சிறைக்கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் இவர்களுடைய மன ஆதங்கத்தைக் கருத்தில் கொண்டு இவர்களுடைய விடுதலைக்காகவும் மேலான நடவடிக்கைகளை எடுப்பீர்கள் எனவும் நான் நம்புகிறேன். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர் மற்றும் மேன் முறையீட்டு நீதிமன்றங்களுக்கு புதிய நீதியரசர்கள் ஜனாதிபதி முன் சத்தியப்பிரமாணம்



மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் நீதியரசருமான அர்ஜுன ஒபேசேகர, உயர் நீதிமன்றத்தின் நீதியரசராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று (திங்கட்கிழமை) முற்பகல் அவர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

மேலும் இதன்போது, மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் புதிய தலைவராக மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பிரியந்த பெர்னாண்டோவும் மேல் நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி சஷி மஹேந்திர, மேன் முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசராகவும் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

# கொவிட் தொற்று மரணங்களை அறிக்கையிடும் முறையில் மாற்றம்



இன்று முதல் கொவிட் மரணங்களை அறிவிக்கும் போதும் கடந்த 48 அல்லது 24 மணித்தியாலங்களில் இடம்பெற்ற அனைத்து மரணங்களையும் அன்றைய தினத்திலேயே அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அதன்படி, இதற்கு முன்னர் அறிக்கை இடப்பட்ட கடந்த தினங்களின் கொவிட் மரணங்களின் எண்ணிக்கை புதிய பொறிமுறையின் கீழ் அறிக்கை இடப்படாது என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர் –

இதற்கு முன்னர் எம்மால் கடந்த தினங்களில் ஏற்பட்ட மரணங்களின் மொத்த எண்ணிக்கை அறிக்கை இடப்பட்டது. எனினும் நாம் இன்று முதல் கடந்த 48 மணித்தியாலங்களில் பதிவான கொவிட் மரணங்கள் அனைத்தையும் அன்றைய தினத்திலேயே வெளியிட தீர்மானித்துள்ளோம். அதன்படி, நாள் ஒன்றில் ஏற்படும் அனைத்து கொவிட் மரணங்களையும் அன்றைய தினமே வெளியிட புதிய பொறிமுறை ஒன்றை தயாரித்துள்ளோம். இதற்கமைய கடந்த 48 மற்றும் 24 மணித்தியாலங்களினுள் இடம்பெறும் கொவிட் மரணங்களை அன்றைய தினத்திலேயே அறிக்கையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# இந்திய முதலீட்டாளர்களுக்கு தாரக்க பாலசூரிய அழைப்பு

இலங்கையில் முதலீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இரு நாடுகளினதும் பகிரப்பட்ட செழுமையை அடைந்து கொள்வதற்காக இலங்கையுடன் இணைந்து கொள்ளுமாறு பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய இந்திய முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஷங்ரி - லா ஹோட்டலில் இருந்து டிஜிட்டல் முறையில் ஒளிபரப்பப்பட்ட முதலீட்டு இலங்கை மன்றத்தின் இந்தியா சார்ந்த அமர்வில் அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ரப்பர், ஆடை மற்றும் தகவல் தொழில்நுட்பத் தொழில் துறைகளில் கவனம் செலுத்தி, சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு ஆர்வமுள்ள 6 முக்கிய துறைகளை தனது உரையின் போது இராஜாங்க அமைச்சர் எடுத்துரைத்தார்.

விஷேட பொருளாதார வலயங்கள் மூலமாக, குறிப்பாக சமீபத்தில் நிறுவப்பட்ட கொழும்புத் துறைமுக நகரத்தின் ஊடாக விஷேட நிதிச் சலுகைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு முதலீட்டாளர்களை அவர் ஊக்குவித்தார்.

முதலீட்டு சபை, இலங்கை வணிக சபை மற்றும் கொழும்பு பங்குச் சந்தை ஆகியவற்றால் ஏற்பாடு செய்



யப்பட்டுள்ள முதலீட்டு இலங்கை யானது, 85 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து 4 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுடன் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் ஆசியாவின் முதலாவது மற்றும் மிகப் பெரிய மெய்நிகர் மன்றமாகும்.

# அடுத்த சில நாள்களில் தொற்று அதிகரிக்குமாம்

## எச்சரிக்கின்றது சுகாதார அமைச்சு

இந்தியாவுடன் ஒப்பிடும்போது இலங்கையில் நாளாந்த கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதாக சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் இவ்வாறு கூறினார்.

அடுத்த சில நாள்களிலும் நாட்டில் கொரோனா தொற்று உறுதியாகும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகள் மட்டுமல்லாமல், சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்க மக்களின் நடத்தையை கட்டுப்படுத்துவதன் மூலம் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியும் என ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

# சீரற்ற வானிலையால் கர்ப்பிணியான மனைவியை 18 கி.மீ. வைத்தியசாலைக்கு தூக்கிச் சென்ற கணவர்

காலி, ஜூன் 15

கர்ப்பிணியான தனது மனைவியை பல கிலோ மீற்றர் தூரம் தூக்கிச் சென்று வைத்தியசாலையில் அனுமதித்த கணவன் தொடர்பில் கடந்த தினம் சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தன.

காலி மாவட்டத்தின் ஹினிதும பகுதியிலுள்ள கொடிகந்த என்ற கிராமத்தில் வாடகை வீட்டில் வசித்து வருபவர் 28 வயதுடைய சுரேஷ்குமார்.

சம்பவ தினமான கடந்த 04 ஆம் திகதி நாட்டில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக ஆற்று பெருக்கத்தால் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி காணப்பட்டன.

இந்நிலையில் 7 மாத கர்ப்பிணியான தனது மனைவியின் வயிற்றிலுள்ள சிசு இரண்டு நாள்களாக துடிக்காத காரணத்தால் குடும்ப நல அதிகாரிக்கு தொடர்பு கொண்ட போது உடனடியாக கர்ப்பிணித் தாயை ஹினிதும வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு அவர் தெரிவித்துள்ளார்.

வெள்ளப்பெருக்கு காரணமாக வாகனங்கள் செல்ல முடியாததால் மனைவியை அழைத்துக் கொண்டு நடை பயணமாக 4 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஹினிதும வைத்தியசாலைக்குச் செல்ல ஆரம்பித்தார் குமார்.

வெள்ளப்பெருக்கு காரணமாக மனைவியை தூக்கிக் கொண்டு அவர் வைத்தியசாலை நோக்கி நடந்துசென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ஹினிதும வைத்தியசாலையில் போதிய வசதிகள் இல்லாத காரணத்தால் 18 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள உடுகம வைத்தியசாலையை நோக்கி குமார் தனது பயணத்தை தொடர்ந்தார்.

பின்னர் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் உடுகம வைத்தியசாலையை தம்பதியினர் அடைந்தனர்.

அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் அவர்கள் காலி வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கேன் பரிசோதனையில் குழந்தைக்கு மற்றும் மனைவிக்கு எவ்வித பாதிப்பும் இல்லை என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.06.2021இல் வெளியிடப்பெற்றது.